# இந்தியாவிற்கே வழிகாட்டி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

# ஒன்றிய அரசை திடமாக எதிர்க்கும் ஒரே முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னின்று நடத்திய முதல்வர் பிறந்தநாள் விழாவில் நீதியரசர் கே.சந்துரு புகழாரம்!

**சென்னை, மார்ச் 12-**

**சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னின்று நடத்திய முதல்வர் பிறந்தநாள் விழாவில் நீதியரசர் கே. சந்துரு அவர்கள் உரையாற்றும்போது "ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்க்கக்கூடிய ஒரே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்" என்று புகழாரம் சூட்டினார்.**

இவ்விழாவில் நீதியரசர் கே.சந்துரு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

அமைச்சர் சேகர் பாபு ஒரு நாள் என்னை அழைத்து, 6 ஆம் தேதி மாலை உங்கள் டைரியில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். என்ன விஷயம் என்று கேட்டேன், "சொல்கிறேன்" என்று சொன்னார் அவர். அவர் சொன்னதை தட்ட முடியாமல், என் டைரியில் 6 ஆம் தேதியைக் குறித்து வைத்துக் கொண்டேன்.

இன்றைக்கு மாலை 7 மணிக்கு வந்துவிடுங்கள் என்று சொன்னார், அவர் சொன்னபடியே வந்துவிட்டேன். இந்த மேடையில் அவர், நீதிபதிகளை அறிமுகம் செய்யும்பொழுது, "நீதியரசர்கள், ஒரு கட்சித் தலைவரைப் பாராட்டுவதற்காக வந்திருக்கும் இந்த நிகழ்ச்சியைப் போன்று வேறு எப்போதும் பார்த்ததில்லை" என்று சொன்னார். நாங்கள் ஒரு கட்சித் தலைவரைப் பாராட்டுவதற்காக இங்கு நாங்கள் வரவில்லை. தமிழகத்தின் ஒரு தந்தையைப் பாராட்ட வந்திருக்கின்றோம். தந்தை என்று சொன்னால், அது ஒரு கெட்ட வார்த்தை அல்ல. தமிழக மக்கள் இன்றைக்கு ஏன், அவரை தந்தை என்றோ, அப்பா என்றோ அழைக்கவேண்டும் என்பதற்குச் சில முன்னுதாரணங்களை நீதிபதி அக்பர் அலி இங்கே சொன்னார். அதுகுறித்து இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்கிறேன்.

**உயிரைக் கொடுத்தற்க்காக வாழ்த்துகிறோம்!**

மணிமேகலை காவியத்தை நீங்கள் எல்லாம் படித்திருப்பீர்கள், சிலப்பதிகாரத்தில் மாதவி என்ற ஒரு பெண் - மக்களுக்கு உணவு அளிக்கக் கூடிய ஒரு சேவையைப் பாராட்டி சொல்லும்போது, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்று.

அதற்கு, யார் ஒருவருக்கு உணவு கொடுக்கிறார்களோ, அது உயிர் கொடுத்ததற்குச் சமம் என்று பொருள். உயிரைக் கொடுத்ததற்காக யாரை நாம் வாழ்த்துகிறோம்? யாரை நாம் நாள்தோறும் பிரார்த்திக்கின்றோம்?

அதேபோல, இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய இளைஞர்கள், மாணவர்கள் மூன்று வயதிலிருந்து 15 வயதுவரை, பள்ளிக்கூடத்தில் படிக்கின்றவர்களுக்கு மதிய உணவு போதாது; அவர்களுக்குக் காலை உணவு கொடுக்கவேண்டும் என்று, காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளாக நான், அனைத்து முதலமைச்சர்களிடம் ஒரு மனு கொடுப்பேன். மதிய உணவுத் திட்டத்தை எல்லோரும் வரவேற்கிறார்கள். அந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டபோது, பலர் கேலி செய்தனர். ஆனால், இன்றைக்கு உலகமே வியக்கக் கூடிய திட்டமாக தமிழகத்தின் மதிய உணவுத் திட்டம் இருக்கிறது.

இந்தத் திட்டம் மிகப்பெரிய அளவில் விரிவுப் படுத்தப்பட்டு, அந்தத் திட்டத்தில் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாத குழந்தைகளே இல்லை - தானே விரும்பினால் ஒழிய, எல்லோருக்கும் உணவு அளிக்கும் திட்டமாக மதிய உணவுத் திட்டம் இருக்கிறது. இதைப் பார்த்து உச்சநீதிமன்றமும் ஒரு உத்தரவு போட்டது. "அனைத்து மாநில அரசுகளும், தமிழகத்தில் இருக்கக்கூடிய மதிய உணவுத் திட்டம் போன்று, நிறைவேற்றவேண்டும்" என்று.

**காலை உணவு அளித்த பெரிய நெஞ்சம்!**

ஒரு சிறிய திட்டமாகத் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், இன்றைக்கு மிகப்பெரிய வடிவம் பெற்று, இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களிலும் உள்ள குழந்தைகள் மதிய உணவை உட்கொள்கிறார்கள் என்றால், அது தமிழகத்தினால்தான். மதியம் உணவு வரை ஒரு மாணவன் எப்படி காத்திருப்பான்? பெற்றோர் வேலைக்குச் சென்று விடுவதால், காலையில் சமைப்பதற்கு நேரமில்லை. மாணவன் கையில் ஒரு சிறிய அளவில் காசு கொடுத்துவிட்டு, வேலைக்குப் போய்விடுகிறார்கள். அந்த மாணவன் பள்ளிக்கு வரவேண்டும்; பாடம் கேட்கவேண்டும்; பாடத்தில் சிறப்புப் பெறவேண்டும் என்றெல்லாம் சொன்னால், அந்த மாணவன் பசித்த வயிறுடன் பாடத்தை எப்படி கவனிக்க முடியும் என்பது கேள்விக்குறி.

இந்தக் கேள்வியை நான் பல முதலமைச்சர்களிடம் மனுவாகக் கொடுத்தேன். காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று.

நிதிப் பற்றாக்குறை என்று சொன்னார்கள்; அதற்குச் சாத்தியமில்லை என்று சொன்னார்கள்.

**அப்பா என்று அழைத்தால் என்ன தவறு?**

ஆனால், இன்றைக்குத் தமிழகத்தில் அதற்குச் சாத்தியம் இருக்கிறது என்றால், தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் பயின்கின்ற மாணவர்களுக்குக் காலை உணவை அளிக்கக்கூடிய ஒரு பெரிய நெஞ்சத்தை, அவரை அப்பா என்று அழைத்தால் என்ன தவறு? அப்பா என்ற சொல்லைக் கேட்டால், சில பேருக்குக் கசப்பாக இருக்கிறது?

நீ சொல்லவேண்டாம்; உன் பிள்ளைகள் சொல்வார்கள், உன்னுடைய பேரன்கள் சொல்லுவார்கள் அப்பா என்று அவரை அழைப்பார்கள். கடவுளை ஆயிரத்தெட்டுப் பெயர் சொல்லி அழைக்கின்றோம். சகஸ்ர நாமம் என்று சொல்வார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களுக்குக் காலை உணவு அளிக்கின்றத் திட்டத்தை மிகப்பெரிய பொருள் சுமையுடன் செய்கிறார் என்று சொன்னால், அவரை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம், அப்பா என்று மட்டுமல்ல!

இன்றைக்கு அந்தப் பிரச்சினையை நாம் எப்படிப் பார்க்கவேண்டும் என்றால், ஒரு கருத்தியல் ரீதியாகப் பார்க்கவேண்டும். இன்றைக்கு இந்தியாவில் காலை உணவுத் திட்டம், தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் கிடையாது. இன்னும் சில காலத்தில், இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் பின்பற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் மதிய உணவுத் திட்டத்தில், வாரத்திற்கு மூன்று முட்டைகள் போடுகிறார்கள். வாரத்தில் அய்ந்து நாள்கள் வேலை நாட்கள் என்றால், மூன்று நாள்கள் முட்டை அளிக்கப்படுகிறது. ஆனால், மத்திய பிரதேசத்தில் முட்டை கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். கருநாடகாவில், முட்டைக் கொடுப்பதை நிறுத்தி னார்கள். மறுபடியும் கொடுத்தார்கள்; இப்போது மீண்டும் நிறுத்தி விட்டார்கள். காரணம் என்னவென்றால், பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் பெரும்பான்மையானவர்கள் சைவம் என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் சொல்வது உண்மை அல்ல. மத்தியப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்கள் தொகைக் கணக்கின்படி 51 சதவிகிதத்தினர் அசைவம் சாப்பிடுகின்றவர்கள்தான். ஆனால், இன்றைக்குக் காவிக் கொள்கை - ஒரு தேசம், ஒரு தேர்தல் மட்டுமல்ல - இன்னும் கொஞ்ச நாள்களில் ஒரு உணவு - ஒரு தலைவர்தான் இருப்பார். அந்த ஒரு தலைவர் யார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். தனக்குத்தானே முடிசூட்டிக் கொள்ள ஒரு தலைவர் தயாராகிக் கொண்டிருக்கிறார்.

**தமிழ்நாட்டுக்கு எட்டுமுறை வந்தவரின் நிலை என்ன?**

அதே சமயம் தமிழ்நாட்டு மக்களைப் பாராட்டவேண்டும்; கேரள மாநில மக்களைப் பாராட்டவேண்டும். கடந்த தேர்தலின்போது, எட்டு முறை தமிழ்நாட்டிற்கு வந்தார். எப்படியாவது தமிழ் நாட்டை மீட்டுவோம். எப்படியாவது தென் மாநிலங்களில் நுழைந்துவிடுவோம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்தார்கள். அப்படி பிரச்சாரம் செய்யும்போது, நம்முடைய சவுந்திரபாண்டியனார் அங்காடி சாலையான பாண்டிபஜாரில் ஒரு திறந்த வாகனத்தில் மோடி வருகிறார்.

இப்போது எல்லாமே இந்தி மயமாகிவிட்டது. சட்டங்களை இந்தியில்தான் போடுகிறார்கள்.

இங்கே ஒரு மலை இருக்கிறது; அவர் காவல் துறை அதிகாரியாகவே இருந்திருக்கலாம். அவர் என்ன சொல்கிறார் என்றால், "தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்களுக்கு ஒரு மொழியை நீங்கள் மறுக்கிறீர்கள்? என்று. தமிழகத்தில் உள்ள மாணவர்கள் எல்லாம் பள்ளிக்கு வர வேண்டும் என்பதற்காக காலை உணவு அளிக்கப்படுகிறது. அதைப் பாராட்டுவதற்கு அவர்களுக்கு மனதில்லை. மற்ற மாநிலங்களைவிட, பள்ளிகளுக்கு மாணவர்கள் அதிகமான அளவிற்கு வருகிறார்கள் என்றால், கேரளத்திற்கு அடுத்ததாக தமிழ்நாடுதான்.

அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதற்காக தமிழ்நாடு அரசைப் பாராட்டுகின்ற மனது வரவில்லை அவர்களுக்கு.

**மிஸ்டுகால் கட்சி!**

ஆனால், எதற்காக அவர்கள் வருகிறார்கள் என்றால், இந்தி படிக்கவேண்டும்; இந்தி மொழியைத் திணிக்கவேண்டும் என்று வீடு வீடாகச் சென்று கையெழுத்து வாங்குகிறது ஒரு பெரிய கூட்டம். அவர்கள் எப்பொழுதுமே மிஸ்டு கால் கட்சிதான். கையெழுத்துப் போடுவதற்கு அவர்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும். எவ்வளவு கையெழுத்து வேண்டுமானாலும் அவர்களே போட்டுக் கொள்ளலாம். இந்தக் கொள்கைப் பிரச்சினையில், இருமொழித் திட்டமா? மும்மொழித் திட்டமா? என்றால், அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்திலிருந்தே இருமொழிக் கொள்கைதான் தமிழ்நாட்டில். அதனை மாற்றுவதற்கு தமிழ்நாட்டில் உள்ள எந்தக் கட்சியும் தயாராக இல்லை. இரண்டே இரண்டு கட்சிகளைத் தவிர. மோடி அவர்கள் திறந்த வாகனத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்யும்பொழுது, ஒருவர் இந்தியில் கோஷம் போடுகிறார்; "ஆப் கி பார்; (நமக்கு) ச்சார் சவ் பார் (நானூறு)" என்று. அங்கே பக்கத்தில் நிறைய ஐஸ் கடைகள் இருக்கின்றன. "ஆப் கி பார்" என்று ஒருவர் சொன்னவுடன், எல்லோரும் "சாக்கோ பார்" என்கிறார்கள்.

அவர்களுக்கு சாக்கோ பார் என்றுதான் மனதில் இருப்பதால், சாக்கோ பார் என்றனர். 15 நிமிடங்களாக யாரும் ச்சார் சவ் பார் என்று சொல்லவில்லை, சாக்கோ பார் என்றுதான் சொன்னார்கள்.

**மைனாரிட்டி அரசாகமாற்றிய தமிழ்நாட்டு மக்களை பாராட்டுகிறேன்!**

தமிழ்நாட்டு மக்கள் சாக்கோ பார் கொடுத்து, அந்தக் கட்சியை மைனாரிட்டி அரசாக மாற்றியதற்கு மக்களை நான் பாராட்டுகிறேன். 400 இடங்கள் என்று கூச்சலிட்டீர்களே, இன்றைக்கு உங்களுக்கு 240 இடங்கள்கூட இல்லாத நிலைதான். அதற்காக மக்களைப் பாராட்டவேண்டும். 40 இடங்களும் நமதே என்று சொன்னார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அப்படியே அவர் 40 இடங்களிலும் வெற்றி பெற்றதால், சில பேருக்கு வயிற்றெரிச்சல்.

இந்தியாவில் ஒரு கூட்டாட்சி இருக்கின்றது என்றால், அந்தக் கூட்டாட்சி, எதிர்க்கட்சிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையில்தான். இன்றைக்கு அவர்கள் நினைத்ததையெல்லாம் மக்களவையில் நிறைவேற்ற முடியாது என்கின்ற சூழ்நிலையை உருவாக்கியதற்காக மக்களுக்கு நன்றி சொல்லவேண்டும். அந்த மக்களை அணி திரட்டி, 40 ம் நமதுதான் - ஒன்றிய அரசு மைனாரிட்டி அரசுதான் என்று சொல்ல வைத்த நமது முதலமைச்சருக்கு நன்றி சொல்கிறோம்.

இன்றைக்குப் பல முதலமைச்சர்கள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்களும் இருக்கிறார்கள். ஆனால், ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கையைத் தொடர்ந்து திடமாக நேர்மையாக எதிர்க்கக்கூடியவர் ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தான். அதைச் சொல்லிலும், செயலிலும் காட்டி வருகின்றார். இன்றைக்கு நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்தைப் பிறந்த நாள் கூட்டம் என்று நான் கருதவில்லை. அடுத்தாண்டு நடைபெறவிருக்கின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் நிச்சயமாக திராவிட அரசு காக்கப்படவேண்டும்; அதன் தலைவராக மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**உணவு எங்கள் உரிமை!**

மத்தியப் பிரதேசத்தில், பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட முட்டையை வாபஸ் பெற்றுவிட்டனர். கருநாடகத்தில் முட்டையை வாபஸ் பெற்றுவிட்டார்கள். தமிழ்நாட்டில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஏனென்றால், உணவு என்பது மக்களுடைய உரிமை.



லட்சத்தீவு என்பது ஒரு சிறிய தீவு. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஓர் அமைச்சகமும் அங்கே இருக்கிறது. அங்கே மாணவர்களுக்கு அளிக்கப்படும் மதிய உணவின்போது, நாள்தோறும் பாலும், கனியும் கொடுத்தார்கள். அதற்காக, சில பால் பண்ணைகளையும் வைத்திருந்தார்கள். இப்போது உள்ள காவி அரசு, ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்தவுடன், அந்தப் பால் பண்ணைகளையெல்லாம் மூடிவிட்டார்கள். மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பால், கனி, இறைச்சி மறுக்கப்பட்டது. இதனை எதிர்த்து ஒருவர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. மாநில அரசின் கொள்கைகளில் நாங்கள் தலையிட விரும்பவில்லை என்று காரணம் சொன்னார்கள்.

**எது மாநில அரசின் கொள்கை?**

மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவை மறுப்பதா? அல்லது மாணவர்களுக்கு ஊட்டச் சத்தை கொடுக்கவேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தின் 44 ஆவது பிரிவில் இருக்கிறதே, அதனை மறுப்பதா?

அந்தத் தீர்ப்பைக் கொடுத்த நீதிபதி என்னுடைய நண்பர்தான், நான் அவரிடம் கேட்டேன், "நீங்கள் வங்காளத்திலிருந்து வருகிறீர்கள். வங்காள அரசு மீன் சாப்பிடக் கூடாது என்று சொன்னால், அதற்குத் தடை கொடுப்பீர்களா? மாட்டீர்களா? என்றேன். அவருக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தது என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்வதற்கு.

அப்போது நான் சொன்னேன், தமிழ்நாட்டில், குழந்தை மரணங்கள் இன்றைக்கு இல்லை என்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

ஊட்டச் சத்து இல்லாமல் குழந்தைகள் பல நோய்களில் அவதிப்படுவது இப்போது குறைந்திருக்கிறது என்கிற புள்ளிவிவரங்களோடு விளக்கினேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பார்ப்பதற்காக பலர் வெளிநாடுகளிலிருந்து வருகிறார்கள். சுற்றிப் பார்ப்பதற்காக அவர்கள் வரவில்லை; தமிழ்நாட்டில் ஊட்டச்சத்துத் திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்பதைப் பார்ப்பதற்காக வருகிறார்கள். பள்ளிக்கூடங்களுக்குச் சென்று பார்க்கிறார்கள். மாணவர்களின் உடல்நலம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கிறார்கள்.

மாணவர்களின் உடல்நலம் மட்டுமல்ல, அவர்களுடைய உள்ளமும் நலம்பெறவேண்டும் என்பதால்தான், இன்றைக்கு ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம்; நாங்கள் பிச்சை எடுத்தாலும் பரவாயில்லை, நீங்கள் நிதியை மறுத்தாலும் பரவாயில்லை - தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கைதான் என்று சொல்கிறோம்.

இதனைப் பாராட்டுவதற்கு மனது வேண்டும்; பாராட்டுவதற்கு மனமில்லாமல் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நம்முடைய முதலமைச்சரை அப்பா என்று எப்படி அழைக்கலாம்? என்று.

உங்களுக்கு என்ன வந்தது? அப்பா என்று அழைப்பவர்கள், அழைக்கட்டும்.

நான் தெருவில் செல்லும்போது, நம்மூரில் என்ன சொல்வார்கள், என்னுடைய தலையில் வெள்ளை முடியைப் பார்த்து, என்னை அப்பா என்று கூப்பிட முடியும். ஆகவே, தாத்தா என்று சொல்வார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்பாவாகவே இருக்கட்டும் என்று நான் சொல்கிறேன்.

எனக்கு அவரை, கடந்த 55 ஆண்டுகளாகத் தெரியும். அவர் கல்லூரி மாணவராக இருக்கும் பொழுதே தெரியும். நாங்கள் வேறு வேறு அரசியல் இயக்கத்தில் இருந்தாலும், ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டவர்கள்தான்.

அவர் மிசா சிறையில் இருந்தபோது, இஸ்மாயில் ஆணையத்தில் நான் ஆஜராகி வாதாடியிருக்கிறேன். அவர்களையெல்லாம் கொடுமைப்படுத்தியதைப் பட்டியலிட்டுச்சொல்லியிருக்கின்றேன். அதனை அந்த ஆணையம் ஏற்றுக்கொண்டு, அறிக்கையிலும் பதிவு செய்திருக்கிறது.

நமது முதலமைச்சரை சிறையில் தாக்கப்பட்ட காவல்துறை அதிகாரிகளைத் தண்டிக்கவேண்டும் என்று இஸ்மாயில் ஆணையம் அறிக்கை கொடுத்துப் பரிந்துரைத்திருந்தாலும், அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து, அவர்களுடைய நச்சரிப்பைத் தீர்த்துக் கொண்டார்கள். உயர்நீதிமன்ற நீதிபதிகளுடைய அறிக்கை இன்றைக்கு தூசி படிந்திருப்பதை நான் பார்க்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நகரத் தந்தையாக இருக்கும்போது, சென்னையில் கட்டிய மேம்பாலங்கள் கட்டியது குறித்து, வழக்குத் தொடர்ந்தனர். அவரைக் கைது செய்ய முயற்சி செய்தார்கள். அதற்கு முன் பிணைக்காக நீதிமன்றத்தில் நாங்கள் ஆஜரானோம். அந்த நீதிபதியிடம் நான் சொன்னேன், "எங்களைப் பார்த்து, மேம்பாலம் கட்டியதில் ஊழல் என்று சொல்கிறார்கள்; நாள்தோறும் அவர்கள் வசிக்கக்கூடிய போயஸ் தோட்டத்திலிருந்து அந்த மேம்பாலம் வழியாகத்தான் செல்கிறார்கள்" என்றேன்.

ஆக, அரசியலில காழ்ப்புணர்வு என்பது, அரசியலில் தங்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் எதிர்ப்பது என்பது ஒரு நாகரிகமாக மாறிக் கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கின்றோம். தேர்தலில், ஒன்றரை சதவிகித வாக்கு வாங்காத கட்சி, எத்தனைக் குரல்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எத்தனை ஊடகங்கள் இருக்கின்றன என்பதையும் பார்க்கின்றோம்.

**அமெரிக்காவிலிருந்து கைவிலங்குடன் திரும்பினர்!**

ஒரு சாதாரண கேலிச் சித்திரம் - கார்ட்டூன் - இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குச் சென்றவர்கள், ஆவணம் இல்லாமல் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் திருடுவதற்கோ, கொள்ளையடிப்பதற்காகவோ அமெரிக்காவிற்குச் செல்லவில்லை. அங்கே சென்று உதவி செய்வதற்காகச் சென்றார்கள். தமிழில் ஒரு கூற்று உண்டு - "திரைகடல் ஓடி திரவியம் தேடு" என்று. 'கடலைத் தாண்டியும் நீ பொருள் தேடு' என்பது தான் அதன் அர்த்தம்.

மெக்சிகோ நாடுகளுக்கு அனுப்பினார்கள். பல நாடுகளுக்கு அனுப்பினார்கள். ஆனால், நமது நாட்டில், ஒரு சரக்கு விமானத்தில், விமானப்படை விமானத்தில், மொரச் பலகையில் அமர வைத்து, கைகளிலும், கால்களிலும் விலங்கு பூட்டி, நடு இரவில் அமிர்தசரஸ் நகரத்தில் இருக்கக்கூடிய விமான தளத்தில் இறக்கி விட்டார்கள். அவர்களுக்கு ஏன் கைவிலங்கு போட்டீர்கள்?

உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறது, எந்த மனிதனுக்கும் கைவிலங்கு போடக்கூடாது என்று.

ஒரே ஒரு கேள்வி - நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் சொல்கிறார், "அது அந்த நாட்டினுடைய நடைமுறை" என்று. அந்த நாட்டில் எந்த நடைமுறை என்றாலும், இந்தியர்களை மனிதர்களாக நடத்தவேண்டும் என்று ஏன் நீங்கள் குரல் எழுப்பவில்லை? இதைத்தான் விகடன் பத்திரிகையில் போடப்பட்ட கார்ட்டூன் விளக்குகிறது.

மோடி அவர்கள் கைகளிலும், கால்களிலும் விலங்கு போட்டு அமர்ந்திருக்கின்றார். அமெரிக்க அதிபர் டிரம்ப் அருகில் அமர்ந்திருக்கின்றார். ஒரு கருத்துப் படம் -பல்வேறு சிந்தனைகளை உருவாக்க முடியும். பல்வேறு கருத்துகளை உருவாக்க முடியும். அதைப் பார்த்த நம்முடைய ஒன்றிய ஆட்சியாளர்கள், அந்தக் கருத்துப் படத்தைத் தடை செய்கிறார்கள். இணைய தளத்தை முடக்கினார்கள். அந்தப் பத்திரிகையின்மீது வழக்குத் தொடுக்க முயற்சிக்கிறார்கள்.

ஒரு கருத்துப் படம். உங்களை இந்த அளவிற்கு அச்சப்படுத்தி இருக்கின்றது என்றால், நீங்கள் கொண்டு வரக்கூடிய மக்கள் விரோத கொள்கைகளையெல்லாம் எதிர்ப்பதற்கு எங்களுக்கு ஒரு முதலமைச்சர் இருக்கிறார். அதனால்தான், அவர்மீது உங்களுக்குக் காழ்ப்புணர்ச்சி. எப்படியாவது நசுக்கிவிட மாட்டோமா?

எப்படியாவது ஆட்சியை அகற்றலாமா? என்று அவர்கள் முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சி என்றைக்கும் வெல்லாது!

ஏனென்றால், அவர் தமிழ்நாட்டின் அப்பா!

இவ்வாறு நீதியரசர் கே. சந்துரு அவர்கள் உரையாற்றினார்.

## ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டங்கள்!

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| மதுரை வடக்கு | மேலூர் | மாண்புமிகு பி.மூர்த்தி, வெங்கடேசன் எம்.எல்.ஏ., சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| மதுரை மாநகர் | மதுரை தெற்கு | மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாகராஜன், கோ.தளபதி, எம்.எல்.ஏ., அன்னவயல் கணேசன் |
| மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | சேடப்பட்டி மு.மணிமாறன், நெல்லிக்குப்பம் புகழேந்தி, கவிஞர் சிவமுத்துவளவன் |
| தேனி வடக்கு | பெரியகுளம் | தங்க தமிழ்செல்வன், எம்.பி., கே.எஸ்.சரவணகுமார், எம்.எல்.ஏ., சௌமியன், ஆலங்குடி செல்வராஜ் |
| தேனி தெற்கு | ஆண்டிப்பட்டி | கம்பம் ராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., மகாராஜன், எம்.எல்.ஏ, தக்கோலம் தேவபாலன், எழும்பூர் கோபி |
| விருதுநகர் வடக்கு | விருதுநகர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ஏஆர்ஆர். சீனிவாசன், எம்.எல்.ஏ., குடந்தை ரமேஷ் |
| விருதுநகர் தெற்கு | சாத்தூர் | மாண்புமிகு கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சௌ.தங்கபாண்டியன், எம்.எல்.ஏ., நெல்லை மணி, ஆரூர் மணிவண்ணன் |
| இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | மாண்புமிகு ராஜகண்ணப்பன், காதர்பாட்சாமுத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி |
| தூத்துக்குடி வடக்கு | கோவில்பட்டி | மாண்புமிகு கீதாஜீவன், மார்கண்டேயன், எம்.எல்.ஏ., கந்திலிகரிகாலன், டாக்டர் கலைகதிரவன் |
| தூத்துக்குடி தெற்கு | திருவைகுண்டம் | மாண்புமிகு அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சண்முகையா, எம்.எல்.ஏ., கடலூர் இள.புகழேந்தி |
| திருநெல்வேலி கிழக்கு | அம்பாசமுத்திரம் | இரா. ஆவுடையப்பன், ஆலங்குளம் மரியராஜ், எஸ்.கே.ஸ்ரீராம், சேலம் கோவிந்தன் |
| திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி | அப்துல் வகாப், எம்.எல்.ஏ., திருமதி விஜிலா சத்யானந்த், ஆம்பூர் தருமன் |
| தென்காசி வடக்கு | சங்கரன்கோவில் | இ. ராஜா, எம்.எல்.ஏ., மதுரை பாலா, திருப்பூர் கூத்தரசன் |
| தென்காசி தெற்கு | ஆலங்குளம் | ஜெயபாலன், ஈரோடு இளையகோபால், குடியாத்தம் பாரி |
| கன்னியாகுமரி கிழக்கு | நாகர்கோவில் | ஆர்.மகேஷ், நெல்லை ஏ.ரவி, சிவகாசி ஜீவா |
| கன்னியாகுமரி மேற்கு | விளவங்கோடு | மனோ. தங்கராஜ் எம்.எல்.ஏ., ஆயிரப்பேரி மா.முத்துவேல், உடன்குடி தனபால் |
| கிருஷ்ணகிரி மேற்கு | தளி | ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ., கம்பம் செல்வேந்திரன், வழக்கறிஞர் வி.வைத்திலிங்கம், ஆவடி கா.மு.ஜான் |
| திருப்பத்தூர் | திருப்பத்தூர் | கா.தேவராஜ், எம்.எல்.ஏ., நல்லதம்பி, எம்.எல்.ஏ., ஆலந்தூர் ஒப்பிலாமணி, கவிஞர் ஏ.ராஜசேகர் |
| தருமபுரி கிழக்கு | தருமபுரி | பி.தர்மசெல்வன், வி.பி.ராஜன், சபி சுலைமான் |
| தருமபுரி மேற்கு | பாலக்கோடு | முனைவர் பழனியப்பன், சேலம் இரா.தமிழரசன், குடியாத்தம் புவியரசி, குமரி பிரபாகரன் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள்: 07-03-2025.

தலைமைக் கழகம்
தி.மு.க.